1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதில் 60 மெகாவாட் உற்பத்தி செய்யும் ஒரு நிலையமும், 40 மெகாவாட் உற்பத்தி செய்யும் இன்னொரு நிலையமும் இருக்கின்றன. 60 மெகாவாட் நிலையம் இயங்குகிறது. 40 மெகாவாட் நிலையம் இன்னும் இரண்டொரு நாட்களில் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து மின்சாரம்

**138 வினா:* திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72ஆம் ஆண்டில் நமது மாநிலத்திற்கு மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்கள் மின் சப்ளை செய்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) 1971-72-ஆம் ஆண்டில், நம் மாநிலம் 186 மில்லியன் யூனிட் மின்சாரத்தை மைசூரிலிருந்தும் 328 மில்லியன் யூனிட் மின்சாரத்தை கேரளத்திலிருந்தும் பெற்றுள்ளது.

திரு. என். கிட்டப்பா: இந்த ஆண்டு இந்த இரண்டு மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்குக் கிடைத்து வந்த மின்சாரம் நிறுத்தப்பட்டு விட்டதாகவும், அப்படி நிறுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால் மின்சார வெட்டு அதிகரித்து விட்டதாகவும் எல்லோருக்கும் தெரிகிறது. எனவே, நமது மாநிலத்திலேயே மின்சாரத்தினை அதிகமான அளவுக்கு உற்பத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா என்பதை இங்கே அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதற்காக தனியாக ஒரு ரிபோர்ட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் சட்ட மன்றத்தில் வைக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த ஆண்டும் தொடர்ந்து அவர்கள் நமக்கு சப்ளை செய்து வருகிறார்களா? சென்ற ஆண்டு மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து நாம் வாங்கிய மின்சாரத்திற்கு நாம் கொடுத்த விலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டு ஒரு யூனிட்டுக்கு முதல் 15 கோடி யூனிட்கள் வரையில் 5 பைசாவும், அதற்கு மேலே உள்ளதற்கு ஒரு யூனிட்டிற்கு 5.25 பைசா என்றும் தரப்பட்டுள்ளது. இரண்டு மாநிலங்களிலும் மின்சாரம் இல்லாத காரணத்தினால் இப்பொழுது கொடுக்கவில்லை.

திரு. நா. வீராசாமி: கேரளாவில் இப்பொழுது நிலைமை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவ்வளவு மோசமாக இல்லை. எனவே, நம்முடைய அரசு கேரள அரசை அணுகி சென்ற ஆண்டும், அதற்கு முன் ஆண்டும் கொடுத்ததுபோல் இந்த ஆண்டும் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பல முறை கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் மின்சாரம் இல்லை என்ற பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

Inter-State Transport Services

* 139. *Q*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the agreement made by the Tamil Nadu Government and Kerala Government for operating inter-State bus services?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒப்பந்தம் இன்னும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோவிலுக்கு மின்னல் வேக பஸ் விடுவதாக குறிப்பிடப்பட்டது. எப்பொழுது அது நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கொள்கை அளவிலே கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் போக்குவரத்தைப்பற்றி ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான விவரங்களை இரு மாநில அதிகாரிகளும் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒப்பந்தம் இன்னும் முடிவு பெறவில்லை. இருந்தாலும், திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு ஓடுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்

படுத்துவதற்கு கேரள அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் 20-க்கு மேற்பட்ட தடவைகள் அந்தப் பகுதியில் ஓடுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரவு நேர பஸ்கள் விடுவதற்கு ஒரு ஆலோசனை இருந்ததே, அது என்ன ஆயிற்று? அப்படி பஸ்கள் விடவில்லை என்று சொன்னால் துரிதமாக விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரவு நேரங்களில் ஓட்டுவதற்கான நிலைமையையும் ஒட்டித்தான் பயணத் தடவைகள் ஆதிகரித்திருக்கின்றன. இரவில் கூட திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு பஸ் வசதிக்காக ஏற்பாடு ஆகியிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு மின்னல்வேக பஸ் விடுவதாகக் கூறப்பட்டதே, அது நடைமுறையில் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர்கோவில் வழியாக கேரள அரசாங்கமும் நம்முடைய அரசாங்கமும் பஸ் விடுவது என்று கேரள மாநில போக்குவரத்து அமைச்சர் அவர்கள் என்னைச் சந்தித்துப் பேசிய பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் நல்ல பஸ்கள் கிடைத்தவுடன் அதற்கான ஏற்பாடுகளை இரண்டு அரசும் மேற்கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன் : ஆந்திர அரசோடு ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் 50 பஸ்கள் தமிழக அரசு விடுவதாக இருந்ததே, அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆந்திர அரசோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தப் பேருந்துகள் இப்பொழுது இரு மாநிலங்களிடையேயும் விடப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : ஆந்திர மாநிலத்தோடு செய்து கொண்டிருக்கிற ஒப்பந்தத்தின்படி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே நாஷனலைஸ் செய்த பஸ்கள் சில, நம்முடைய அரசு பேருந்துகள் ஓட்ட முடியாத சூழ்நிலையில் அவை புதுப்பிக்கப்படவில்லை என்ற புகார்கள் வருகின்றன. நெல்லூர், நாயுடுப்பேட்டை, வரதப்பாளையம் போன்ற